## அகத்திணையியல்

அவற்றுள்,
நடுவண் ஐந்திணை, நடுவணது ஒழிய,
படு திரை வையம் பாத்திய பண்பே

உரை

இது, மேற் சொல்லப்பட்ட எழுதிணையுள், நிலம் பெறுவன வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

அவற்றுள்- மேற்சொல்லப்பட்ட எழுதிணையுள், நடுவணது ஒழிய - நடு எனப்பட்ட பாலை ஒழிய, நடுவண் ஐந்திணை - (கைக்கிளை பெருந்திணைக்கு) நடுவணதாகி நின்ற ஐந்திணை, படுதிரை வையம் பாத்திய பண்பு - ஒலிக்கின்ற திரைகடல் சூழ்ந்த உலகம் பகுக்கப்பட்ட இயல்பு.

இதனாற் சொல்லியது.

0948

பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

முதல், கரு, உரிப்பொருள், என்ற மூன்றே, நுவலும் காலை, முறை சிறந்தனவே-பாடலுள் பயின்றவை நாடும் காலை

### உரை

இது, மேற்சொல்லப்பட்ட நடுவண் ஐந்திணை ஆமாறும், ஒரு வகையான் உலகத்துப் பொருள் எல்லாம் மூவகையாகி அடங்கும் என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பாடலுள் பயின்றவை நாடும் காலை - சான்றோர் செய்யுளகத்துப் பயின்ற பொருளை ஆராயுங்கால். முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே - முதற்பொருள் எனவும் கருப்பொருள் எனவும் உரிப்பொருள் எனவும் சொல்லப்பட்ட மூன்று பொருண்மையும் (காணப்படும்). நுவலுங்காலை முறை சிறந்தன -அவை சொல்லுங்காலத்து முறைமையாற் சிறந்தன.

## அகத்திணையியல்

“முதல் எனப்படுவது நிலம்,
பொழுது, இரண்டின்
இயல்பு“ என மொழிப-இயல்பு உணர்ந்தோரே

உரை

இது, மேற்சொல்லப்பட்ட மூன்று வகைப் பொருளினும் முதற்பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பு - முதல் என்று சொல்லப்படுவது நிலமும் காலமும் ஆகிய அவ்விரண்டினது இயற்கை, என மொழிப இயல்பு உணர்ந்தோர் -என்று சொல்லுவர் உலகின் இயல்பு உணர்ந்தோர்.

இயற்கை என்பதனால் செய்துகோடல் பெ-றாமை அறிந்து கொள்க. நிலம் என்பதனால் பொருள்தோற்றுதற்கு இடமாகிய ஐம்பெரும்

0950 பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

மாயோன் மேய காடு உறை உலகமும்,
சேயோன் மேய மை வரை உலகமும்,
வேந்தன் மேய தீம் புனல் உலகமும்,
வருணன் மேய பெரு மணல் உலகமும்,
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், எனச்
சொல்லிய முறையான் சொல்லவும்படுமே

### உரை

இது, நிறுத்தமுறையான் நிலத்தால் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

மாயோன் மேய காடு உறை உலகமும் - (இ-ள்) மாயவன் மேவிய காடுபொருந்திய உலகமும், சேயோன் மேய மைவரை உலகமும் - முருகவேள் மேவிய மைவரை உலகமும், வேந்தன் மேயதீம்புனல் உலகமும் - இந்திரன் மேவிய தீம்புனல் உலகமும், வருணன் மேய பெருமணல் உலகமும் - வருணன் மேவிய பெருமணல்

## அகத்திணையியல்

காரும் மாலையும்-முல்லை

உரை

இனிக் காலத்தால் திணையாமாறு உணர்த்துவான் எடுத்துக் கொண்டார். இஃது அவற்றுள் முல்லைத்திணைக்குக் காலம் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

காரும் மாலையும் முல்லை - கார்காலமும் மாலைப் பொழுதும் முல்லைத் திணைக்குக் காலமாம்.

காராவது மழை பெய்யுங் காலம். அஃது ஆவணித் திங்களும் புரட்டாசித் திங்களும். மாலையாவது, இராப் பொழுதின் முற்கூறு.

## அகத்திணையியல்

"குறிஞ்சி,
கூதிர், யாமம்" என்மனார் புலவர்

### உரை

இது, குறிஞ்சிக்குக் காலம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) குறிஞ்சி - குறிஞ்சித் திணைக்குக் காலமாவது, கூதிர் யாமம் என்மனார் புலவர் - கூதிர்க்காலமும் யாமப்பொழுதும் என்று கூறுவர் புலவர்.

கூதிராவது ஐப்பசித் திங்களும் கார்த்திகைத் திங்களும் யாமமாவதுஇராப்பொழுதின் நடுக் கூறு.

0955

பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

எற்பாடு,
நெய்தல் ஆதல் மெய் பெறத் தோன்றும்

### உரை

இது, நெய்தற்றிணைக்குக் காலம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எற்பாடு - எற்படுபொழுது, நெய்தல் ஆதல் மெய்பெற தோன்றும் - நெய்தற்றிணைக்குக் காலமாதல் பொருண்மை பெறத் தோன்றும்.

எற்பாடாவது பகற்பொழுதின் பிற்கூறு.

0954

பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

வைகறை, விடியல்,-மருதம்

### உரை

இது, மருதத் திணைக்குக் காலம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்)வைகறை விடியல் மருதம் - வைகறை விடியலும் மருதத்திற்குக் காலமாம்.

வைகறையாவது இராப்பொழுதின் பிற்கூறு. விடியலாவது, பகற்பொழுதின் முற்கூறு. பருவம் வரைந்தோதாமையின், அறுவகைப் பருவமும் கொள்ளப்படும். இது நெய்தற்கும் ஒக்கும்.

VoLTE 9:53 PM 16%



## அகத்திணையியல்

“பனி எதிர் பருவமும் உரித்து“ என மொழிப

### உரை

இ.ஃ.து, எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்)பனிஎதிர் பருவமும் உரித்து என மொழிப - (குறிஞ்சித் திணைக்கு) முன்பனிக்காலமும் உரித்தென்று சொல்லுவர்.

இதனைக் கூதிர்க்காலத்தோடு ஒருங்கு கூறாமையின், அத்துணைச் சிறப்பிற்று அன்றெனக் கொள்க. குறிஞ்சி என்றது அதிகாரத்தான் வந்தது.

முன்பனிக் காலமாவது மார்கழித் திங்களும் தைத் திங்களும். உம்மை இறந்தது தழீஇய எச்ச உம்மை.

## அகத்திணையியல்

நடுவுநிலைத் திணையே நண்பகல்
வேனிலொடு
முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே

உரை

இது, பாலைக்குக் காலமும் இடனும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நடுவு நிலைத்திணை - நடுவு நிலைத்திணையாகிய பாலையாவது, நண்பகல் வேனிலொடு முடிவுநிலைமருங்கின் முன்னிய நெறித்து - நண்பகற்பொழுது வேனிற் காலத்தொடு புணர்ந்து நின்றவழிக் கருதிய நெறியை உடைத்து.

இ∴து, இளவேனில் முதுவேனில் என்னும் இருவகைப் பருவத்தின் கண்ணும் வரும். நண்பகற்பொழுது காலமாம் என்பதூஉம், ஆண்டு இயங்கும் நெறி நிலமாம்

0957

பொருளதிகாரம் அகத்திணையியல்

அகத்திணையியல்

“பின்பனிதானும் உரித்து“ என மொழிப

உரை

இ.ஃ.து, எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) பின்பனியும் உரித்து என மொழிப - பின் பனிக்காலமும் உரித்து என்று கூறுப(பாலைக்கு).

இது வேறோதினமையான், வேனில்போலச் சிறப்பு இன்றெனக் கொள்க. பின்பனியாவது மாசித் திங்களும் பங்குனித் திங்களும்.

அ.ஃ.தற்றாக, இவ்வறுவகைப் பருவமும் அறுவகைப் பொழுதும் இவ்வைந்திணைக்கு உரியவாறு என்னையெனின், சிறப்பு நோக்கி என்க. என்னை சிறந்தவாறு எனின்? முல்லையாகிய நிலனும், வேனிற்காலத்து வெப்பம் உழந்து மரனும் புதலும்

## அகத்திணையியல்

“இரு வகைப் பிரிவும் நிலை பெறத் தோன்றலும்
உரியது ஆகும்“ என்மனார் புலவர்

### உரை

இது, பாலைக்கு உரிய பொருளாம் ஆறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இருவகை பிரிவும் - இருவகைப் பிரிவான தலை மகளைப் பிரிதலும் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும். நிலைபெறத் தோன்றலும் - நிலைபெறத்தோன்றலும். உரியது ஆகும் என்மனார் புலவர் - பாலைக்கு உரிய பொருளாம் என்று கூறுவார் புலவர் (தமர்வரை - தமரை மட்டும்).

உம்மை எச்ச உம்மையாகலான், நிலைபெறத் தோன்றாது பிரிதற்குறிப்பு

0959

பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

திணை மயக்குறுதலும் கடி நிலை இலவே
நிலன் ஒருங்கு மயங்குதல் இல“ என
மொழிப-
புலன் நன்கு உணர்ந்த புலமையோரே

### உரை

இது, மேல் அதிகரிக்கப்பட்ட நிலத்தினானும் காலத்தினானும் ஆகிய திணை மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) திணைமயக்குறுதலும் கடிநிலை இல - ஒரு திணைக்கு உரிய முதற்பொருள் மற்றோர் திணைக்குரிய முதற்பொருளோடு சேரநிற்றலும் கடியப்படாது நிலன் ஒருங்கு மயங்குதல் இல் என மொழிப - ஆண்டு நிலன் சேரநிற்றல் இல்லை என்று சொல்லுவர், புலன் நன்கு உணர்ந்த புலமையோர் - புலன் நன்கு உணர்ந்த புலமையோர்.

## அகத்திணையியல்

உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே

### உரை

இஃது எய்தாதது, எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) உரிப்பொருள் அல்லன - உரிப்பொருள் அல்லாத கருப்பொருளும், முதற்பொருளும் மயங்கவும் பெறும்- மற்றொரு திணையொடு சேர நிற்கவும் பெறும்.

உம்மை எதிர்மறை யாகலான் மயங்காமை பெரும்பான்மை. எனவே,

"உய்த்துக் கொண்டுணர்தல்"

(மரபு. 110)

என்னும் தந்திர உத்தியான் எடுத்தோதிய

## அகத்திணையியல்

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல்,
ஊடல், அவற்றின் நிமித்தம் என்றிவை,-
தேரும் காலை,-திணைக்கு உரிப்பொருளே

உரை

இ.:.து, உரிப்பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) புணர்தல்,
பிரிதல், இருத்தல், இரங்கல்,
ஊடல் அவற்றின் நிமித்தம்
என்று இவை - புணர்தலும்,
பிரிதலும், இருத்தலும், இரங்கலும்,
ஊடலும் அவற்றின் நிமித்தமும் என்று
சொல்லப்பட்ட இவை, தேரும் காலை
திணைக்கு உரிப்பொருள் - ஆராயுங்காலத்து
ஐந்திணைக்கும் உரிப் பொருளாம்.

பிரிவு பாலைக்கு உரித்தாமாறு

0962

பொருளதிகாரம்
அகத்திணையியல்

## அகத்திணையியல்

"கொண்டு தலைக்கழிதலும், பிரிந்து
அவண் இரங்கலும்,
உண்டு" என மொழிப, "ஓர் இடத்தான"

உரை

இதுவும், ஒருசார் உறுப்புப் பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கொண்டு தலைக்கழிதலும் (உண்டு) பிரிந்து அவண் இரங்கலும் உண்டு - கொண்டுதலைக் கழிதலும் உண்டு, பிரிந்து அவண் இரங்கலும் உண்டு. ஓர் இடத்தான் என மொழிப - ஓரோ இடத்துக்கண் என்று கூறுப.

உண்டு என்பதை இரண்டிடத்தும் கூட்டுக. அன்றியும் உண்டென்பதனை இல்லென்பதன் மாறாக்கி விரிவுத்திணை யாக்கிப் பொதுப்பட நின்றது எனவுமாம். ஓரிடத்து என்றமையான்,

## அகத்திணையியல்

கலந்த பொழுதும் காட்சியும் அன்ன

### உரை

இதுவும் அது.

(இ-ள்) கலந்த பொழுதும் - தலைவனைக் கண்ணுற்ற வழி மனநிகழ்ச்சி உளதாங் காலமும், (அதன்) பின்னர்க் குறிப்பறியுந் துணையும் நிகழும் நிகழ்ச்சியும், காட்சியும் - தலைவியை எதிர்ப்படுதலும் அன்ன - ஓரிடத்து நிகழும் உரிப்பொருள்.

கலந்த பொழுது என்பது, தலைமகளைக் கண்ணுற்றவழி மனநிகழ்ச்சி யுளதாங் காலம் அக் காட்சிப் பின்னர்க் குறிப்பறியுந் துணையும் நிகழும் நிகழ்ச்சி. காட்சியாவது தலைவியை எதிர்ப்படுதல். குறிப்பறிந்த பின்னர்ப் புணருந்துணையும் நிகழும் முன்னிலையாக்கல் முதலாயின புணர்தல்

0964 பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

முதல் எனப்படுவது ஆயிரு வகைத்தே

உரை

இதுவும், ஐயம் அறுத்தலை நுதலிற்று.

(இ-ள்) முதல் எனப்படுவது மேல் எடுத்தோதப்பட்டவற்றில் முதல் என்று சொல்லப்படுவது, ஆ இருவகைத்து - நிலமும் காலமும் ஆகிய அவ்விருவகையை உடையது.

எனவே, ஏனையவெல்லாம் உரிப்பொருள் என்றவாறாம். இதனாற் பெற்றது என்னை எனின், முதல் கரு உரிப்பொருள் என அதிகரித்து வைத்தார் இனிக் கருப்பொருள் கூறுகின்றார் உரிப்பொருள் யாண்டுக் கூறினார் என ஐயம் நிகழும் அது "விடுத்தல்" என்க. ஐசுட்டு நீண்டு நின்றது.ஸ

0965 பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை,
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ,
அவ் வகை பிறவும் கரு“ என மொழிப

உரை

இது, கருப்பொருள் ஆமாறு உணரத்துதல் நுதலிற்று.

(இ-ள்) தெய்வம் உணா மா மரம் புள் பறை செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ - தெய்வம் முதலாகச் சொல்லப்பட்டனவும், அவ்வகை பிறவும் கரு என மொழிப - அத் தன்மைய பிறவும் கருப்பொருள் என்று கூறுப.

அவையாவன முதற்பொருட்கண் தோன்றும் பொருள்கள்.

”மாயோன் மேய காடுறை உலகம்”

## அகத்திணையியல்

எந் நில மருங்கின் பூவும் புள்ளும்
அந் நிலம் பொழுதொடு வாராஆயினும்,
வந்த நிலத்தின் பயத்த ஆகும்

### உரை

இது, மேலதற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எ நிலமருங்கின் பூவும் புள்ளும் - யாதானும் ஒரு நிலத்திற் குரிய பூவும் புள்ளும், அ நிலம் பொழுதொடு வாராவாயினும் அந் நிலத்தொடும் பொழுதொடும் வந்தில வாயினும், வந்த நிலத்தின் பயத்த ஆகும் - வந்த நிலத்தின் பயத்த ஆகும்.

"வந்தது கொண்டு வாராதது முடித்தல் " (மரபு . 412) என்பதனால் சிறுபான்மை ஏனையவும் வந்தவழிக்

## அகத்திணையியல்

பெயரும் வினையும் என்று ஆயிரு வகைய-
திணைதொறும் மரீஇய, திணை நிலைப்
பெயரே

உரை

இதுவும், கருப்பொருளின் பாகுபாடாகிய மக்கட்டிறம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பெயரும் வினையும் என்று அ இருவகைய - குலப்பெயரும் தொழிற்பெயரும் என அவ்விருவகைப்படும், திணைதொறும் மரீஇய திணைநிலைப்பெயர் - திணைதொறும் மருவிப் போந்த திணைநிலைப்பெயர்.

திணைநிலைப்பெயர் என்றதனான் அப்பெயருடையார் பிறநிலத்து இலர் என்று கொள்ளப்படும். அதனானே எல்லா நிலத்திற்கும் உரியராகிய மேன்மக்களை

## அகத்திணையியல்

ஆயர், வேட்டுவர், ஆடூஉத் திணைப் பெயர்
ஆவயின் வஷரூஉம் கிழவரும் உளரே

### உரை

இது, நிறுத்தமுறையானே முல்லைக்குரிய மக்கட்பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஆடூஉ திணைப்பெயர் ஆயர் வேட்டுவர் - ஆண் மக்களைப்பபற்றி வரும் திணைப்பெயர் ஆயர் எனவும் வேட்டுவர் எனவும் வரும். ஆவயின் வரும். கிழவரும் உளர் - அவ்விடத்து வரும் கிழவரும் உளர்.

ஆயர் என்பார் நிரைமேய்ப்பார். வேட்டுவர் என்பவர் வேட்டைத் தொழில் செய்வார். அஃது எயினர் என்னும் குலப்பெயருடையார் மேல் தொழிற்பெயராகி வந்தது.
"வந்தது கொண்டு வாராதது முடித்தல்
" (மரபு. 112) எனபதனான் ஆய்ச்சியர்

## அகத்திணையியல்

ஏனோர் மருங்கினும் எண்ணும் காலை,
ஆனா வகைய-திணை நிலைப் பெயரே

உரை

இது, குறிஞ்சி முதலாய திணைக்கண் வரும் திணை நிலைப்பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஏனோர் மருங்கினும் எண்ணும் காலை - ஏனை நிலத்துள்ள மக்கண்மாட்டும் ஆராயுங்காலத்து, ஆன் ஆ வரைய திணை நிலைப்பெயர் - அவ்விடத்து அவ்வகைய திணைநிலைப் பெயர்.

என்றது, திணைதொறும் குலப்பெயரும் தொழிற்பெயரும் கிழவர் பெயரும் வரும் என்றவாறு. ஆன் என்பது அவ்விடம் அ என்னும் சுட்டு நீண்டிசைத்தது. அவை வருமாறு - குறிஞ்சிக்கு மக்கட் பெயர்

0970 பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

“அடியோர் பாங்கினும், வினைவலர் பாங்கினும்,
கடிவரை இல் புறத்து“ என்மனார் புலவர்

உரை

இது, நடுவணைந் திணைக்குரிய தலைமக்களைக் கூறி, அதன் புறத்த வாகிய கைக்கிளை பெருந்திணைக்குரிய மக்களை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் - அடித்தொழில் செய்வார் பக்கத்தினும், வினைசெய்வார் பக்கத்தினும் கடிவரைஇல் (மேற் சொல்லப்பட்ட புணர்தல் முதலான பொருளைக் கூறல்) கடிந்து நீக்கும் நிலைமையில்லை, புறத்து என்மனார் புலவர் - ஐந்திணைப் புறத்தவாகிய கைக்கிளை பெருந்திணைக்கண் என்று சொல்வர் புலவர்.

## அகத்திணையியல்

ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்

உரை

இதுவும், கைக்கிளை பெருந்திணைக்குரிய தலைமக்களை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஏவல் மரபின் ஏனோரும் உரியர்- (மேற்சொல்லப்பட்ட அடியோரும் வினைவலரும்) ஏவுதல் மரபையுடைய ஏனையோரும் (கைக்கிளை பெருந்திணைக்கு)உரியர் அவரும் ஆகிய நிலைமை அன்னர் - அவரும் உரியராகிய நிலைமை அத்தன்மைய ராகலான்.

அவருமாகிய நிலைமை என மொழிமாற்றுக. கைக்கிளை பெருந்திணை என்பது அதிகாரத்தான் வந்தது. இதனாற் சொல்லியது தலைமக்களும் கைக்கிளை

0972 பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

ஓதல், பகையே, தூது, இவை பிரிவே

### உரை

மேல் கைக்கிளை முதலாக எழுதிணையு முணர்த்தினார், அவற்றுள் நிலம் பகுக்கப்பட்ட முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்னும் நான்கு திணையும் களவு கற்பு என்னும் இருவகை கைக்கோளினும் நிகழ்தலின் அவற்றை யொழித்து நிலம் பகுக்கப்படாத கைக்கிளை பெருந்திணையும் பாலையும் இவ்வோத்தினுள் உணர்த்துகின்றனராதலின் அவற்றுள் பாலைக் குரித்தாகிய பிரிவு உணர்த்துவான் பிரிவுக்கு நிமித்தம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஓதல் பகை தூது இவை பிரிவு - ஓதலும் பகையும் தூதும் என்று சொல்லப்பட்ட இத் தன்மைய பிரிவிற்கு

0974

பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

தானே சேறலும், தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும், வேந்தன் மேற்றே

உரை

இது, பகைவயிற் பிரிதற்குரிய தலைமக்களை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தானே சேறலும் - (பகைவர் காரணமாகி அரசன்) தானே சேறலும், தன்னொடு சிவணி ஏனோர் சேறலும் - அவனொடு கூடி ஒழிந்தோர் சேறலும், வேந்தன் மேற்று - வேந்தன் கண்ணது.

பகை யென்றது மேனின்ற அதிகாரத்தான் உய்த்துணர்ந்து கொள்ளக்கிடந்தது.
“தானே“ என்பதன் ஏகாரம் பிரிநிலை் படையை யொழிய என்றவாறு.
போரைக் குறித்துப் பிரிதலும் அரசர்க்கு உரித்தென்று கொள்க. இதனுள் அரசன்

0975 பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையான்,
பிழைத்தது பிழையாது ஆகல் வேண்டியும்,
இழைத்த ஒண் பொருள் முடியவும்,-பிரிவே

உரை

இது, மேற்சொல்லப்பட்ட மூவகை நிமித்தமுமன்றி வருவன உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய - நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பையுடைய மக்களையல்லாத தேவரது பூசையும் விழவும் முதலாயினவும் முல்லை முதலாக சொல்லிய முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய நிலத்தின் மக்களும், முறையால் பிழைத்தது பிழையாது ஆகல்வேண்டியும் - முறைமையில் தப்பியவழி தப்பாது

0976 பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே

உரை

இது, நிறுத்த முறையானே அறம்காரணமாகப் பிரிதற்குரிய தலைமக்களை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்து- மேலோராகிய தேவரது முறைமையை நிறுத்தற்குப் பிரியும் பிரிவு நான்கு வருணத்தார்க்கும் உரித்து. ஐஏகாரம் ஈற்றசைசஸ

0977 பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப

### உரை

இது, காவற்பகுதியாகிய முறை செய்வித்தற்கு உரிய மக்களை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மன்னர் பாங்கின் -மன்னர்க்குரிய பக்கத்திற்கு, பின்னோர் ஆகுப - (அவ்வாறு முறை செய்தற்கு அரசன் தான் சேறல் வேண்டாமையின், அதற்குரியராய் அவனது ஏவல் வழி வரும்) வணிகரும் வேளாளரும் உரியர் ஆகுப.

மன்னர்க்குரிய பக்கமாவது காவல் அஃதாவது நெறியின் ஒழுகாதாரை நெறியின் ஒழுகப் பண்ணுதல்.

## அகத்திணையியல்

உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தினான.

### உரை

இது, வணிகர்க்கு உரியதோர் பிரிவு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உயர்ந்தோர்க்கு
- மேல் அதிகரிக்கப்பட்ட பின்னோராகிய இருவகையோரிலும் உயர்ந்தோராகிய வணிகர்க்கு, ஒத்தின்னா உரிய - ஓதுதல் நிமித்தமாகப் பிரிதலும் உரித்து.

ஓத்துப் பலவாதலின் “ உரிய “ என்றார். ஈண்டு ஓத்து என்பது வேதம் அது நால்வகை வருணத்தினும் மூவர்க்கு உரிய தென்பது இத்துணையெனக் கூறப்பட்டது.

0979

பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

வேந்து வினை இயற்கை வேந்தன் ஒரீஇய ஏனோர் மருங்கினும் எய்து இடன் உடைத்தே

உரை

இது, வணிகர்க்கும் வேளாளர்க்கும் உரியதோர் பிரிவு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வேந்து வினை இயற்கை - வேந்தனது வினை இயற்கையாகிய தூது, வேந்தன் ஒரீஇய ஏனோர் மருங்கினும் - வேந்தனை ஒழிந்த வணிகர்க்கும் வேளாளர்க்கும், எய்து இடன் உடைத்து - ஆகுமிடன் உடைத்து.

வேந்தனது வினை - வேந்தற்குரிய வினை. " இடனுடைத்து " என்றதனான் அவர் தூதாங்காலம் அமைச்சராகிய வழியே நிகழும் என்று கொள்க. ஐஏகாரம் ஈற்றசை.ஸ

0980

பொருளதிகாரம்
அகத்திணையியல்

## அகத்திணையியல்

பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே

உரை

இதுவும் அது.

(இ-ள்) பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்து - பொருள்வயிற் பிரிவும் மேற்சொல்லப்பட்ட வணிகர் வேளாளரிடத்தில் உரியதாகும். ஐஏகாரம் ஈற்றசை.ஸ

0981

பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான.

### உரை

இ஀.து, அந்தணர் பொருட்குப் பிரியுந்திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான - உயர்தோராகிய அந்தணர் பொருள்வயிற் பிரியுங்காலத்து ஒழுக்கத்தானே பிரிப.

இதனாற் சொல்லியது, வணிகர்க்கும் வேளாளர்க்கும் வாணிகம் முதலாயின பொருணிமித்தம் ஆகியவாறுபோல, அந்தணர்க்கு இவை பொருணிமித்தம் ஆகா என்பதூஉம், அவர்க்கு இயற்கை யொழுக்கமாகிய ஆசாரமும், செயற்கையொழுக்கமாகிய கல்வியுமே பொருட்குக் காரணமாம் என்பதூஉம்

## அகத்திணையியல்

முந்நீர் வழக்கம் மகடூஉவொடு இல்லை

உரை

இதுவும், பொருள்வயிற்
பிரிவதோர் இலக்கணம் உணர்த்துதல்
நுதலிற்று.

(இ-ள்) முந்நீர் வழக்கம்
மகடூஉவோடு இல்லை - (ஈண்டு
அதிகரிக்கப்பட்ட பிரிவு காலிற்பிரிவும்
கலத்திற்பிரிவும் என இருவகைப்படும்
அவற்றுள்) கலத்திற்பிரிவு
தலைமகளுடன் இல்லை.

எனவே, காலிற்பிரிவு தலைமகளை
உடன்கொண்டு பிரியவும் பெறும்
என்றவாறாம்.

கலத்திற் பிரிவு. தலைமகளை ஒழியப்

## அகத்திணையியல்

எத்திணை மருங்கினும், மகடூஉ மடல்மேல் பொற்புடை நெறிமை இன்மையான

### உரை

இத்துணையும் பாலைக்குரித்தாகிய பிரிவிலக்கணம் கூறினார் இது கைக்கிளை பெருந்திணைக்கு உரிய இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எ திணை மருங்கினும் - எல்லாக் குலத்தினிடத்தினும், மகடூஉ மடல்மேல் (இல்லை) - பெண்பால் மடலேறுதல் இல்லை பொற்புடை நெறிமை இன்மையான - பொலிவுபெறு நெறிமை இல்லாமையான்.

“மடன்மேல்“ என்பது மடலேறுதல் என்னும் பொருள் குறித்தது. இல்லை என்பது மேலைச் சூத்திரத்தினின்று தந்துரைக்கப்பட்டது. “பொற்புடை நெறிமை“

## அகத்திணையியல்

தன்னும் அவனும் அவளும் சுட்டி,
மன்னும் நிமித்தம், மொழிப் பொருள்-
தெய்வம்,
நன்மை, தீமை, அச்சம், சார்தல், என்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ,
முன்னிய காலம் மூன்றுடன் விளக்கி,
தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்,
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்,
ஆகிய கிளவியும் அவ் வழி உரிய

### உரை

இது, மேற்கூறப்பட்ட இருவகைப்பிரிவினுள் (அகத். 13) தமரைப் பிரிதலாகிய உடன்போக்கில் நிகழ்ந்த நற்றாய்மாட் டுளதாய கிளவி உணர்த்துதல் நுதலிற்று.

தன்னும் அவனும் அவளும் சுட்டியென்பது, தன்னையும் தலைமகனையும் தலைமகளையும் குறித்து என்றவாறு.

## அகத்திணையியல்

ஏமப் பேஷரூர்ச் 1சேரியும், சுரத்தும்,
தாமே செல்லும் தாயரும் உளரே

### உரை

இது, தலைமகள் உடன்போகியவழிச் செவிலிக்கு உரியதோர்திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஏமம் பேர் ஊர் சேரியும் - ஏமம் பொருந்திய பெரிய ஊரகத்துச் சேரியின்கண்ணும், சுரத்தும் - ஊரினின்றும் நீங்கிய சுரத்தின்கண்ணும் , தாமே செல்லும் தாயரும் உளர் - தாமே செல்லுந் தாயரும் உளர்.

"தாமே செல்லுந் தாயர்" என்பதனால் செவிலி என்பது பெற்றாம் "தாயரும் " என்றதனால் கைத்தாயர் பலர் என்று கொள்ளப்படும். அவ்வழிச் சேரியோரை

0986

பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

அயலோர் ஆயினும், அகற்சி மேற்றே

### உரை

இதுவும், பாலைக்கு உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அயலோராயினும். (சேரியினும் சுரத்தினும் பிரிதலன்றித்) தமது மனையயற்கண் பிரிந்தாராயினும், அகற்சிமேற்றே - பிரிவின்கண்ணதே.

எனவே, ஓர் ஊரகத்து மனையயற்கண்ணும் பரத்தையிற் பிரிவு பாலையாம் என்பதூஉம் உய்த்துணர்ந்து கொள்ளப்படும்.

# அகத்திணையியல்

தலை வரும் விழும நிலை எடுத்து உரைப்பினும்,
போக்கற்கண்ணும், விடுத்தற்கண்ணும்,
நீக்கலின் வந்த தம் உறு விழுமமும்,
வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித்
தாய் நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்,
நோய் மிகப் பெருகித் தன் நெஞ்சு கலுழ்ந்தோளை,
"அழிந்தது களை!" என மொழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தொடு
என்று இவை எல்லாம், இயல்புற நாடின்,
ஒன்றித் தோன்றும் தோழி மேன.

## உரை

இது, பிரிவின்கண் தோழிக்குக் கூற்று நிகழும் இடம்உணர்த்துதல் நுதலிற்று.

## அகத்திணையியல்

“பொழுதும் ஆறும் உட்கு வரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்,
ஊரது சார்பும் செல்லும் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்,
புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்து எதிர் கூறி விடுப்பினும், ஆங்கத்
தாய் நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய் நிலைக்கு அகன்றோர் செலவினும்
வரவினும்,-
கண்டோர் மொழிதல் கண்டது“ என்ப.

### உரை

இது, கண்டோர் கூற்று நிகழும் இடன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவின் ஆகிய குற்றம் காட்டலும், ஊரது சார்பும், செல்லும் தேயமும் ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும் என்பது,

## அகத்திணையியல்

ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும்
ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்,
இடைச் சுர மருங்கின் அவள் தமர் எய்திக்
கடைக் கொண்டு பெயர்தலின் கலங்கு அஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப் பால் பட்ட ஒரு திறத்தானும்,
நாளது சின்மையும் இளமையது அருமையும்
தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்
அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினும் கையினும் வகுத்த பக்கமொடு
ஊதியம் கருதிய ஒரு திறத்தானும்,
புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்,
தூது இடையிட்ட வகையினானும்,
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்,

0989 பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

ஊதியம் கருதிய ஒரு திறத்தானும்,
புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்,
தூது இடையிட்ட வகையினானும்,
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்,
மூன்றன் பகுதியும் மண்டிலத்து அருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்,
பாசறைப் புலம்பலும், முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்,
காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்,
பரத்தையின் அகற்சியின் பரிந்தோள் குறுகி
இரத்தலும் தெளித்தலும் என இரு வகையொடு
உரைத் திற நாட்டம்-கிழவோன் மேன

### உரை

இது பிரிவின்கண் தலைமகற்குக் கூற்றுநிகழும் இடன் உணர்த்துதல் நுதலிற்று.

## அகத்திணையியல்

எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே

உரை

இதுகாறும் பிரிவின்கண் கூறுதலுரியார் பலருள்ளும் நற்றாயும், செவிலியும், கண்டோரும், தோழியும், தலைமகனும் கூறுங் கூற்றுக் கூறினார். இஃது அவரை யொழிந்த தலைமகட்கும், பாங்கற்கும், பார்ப்பார்க்கும், பாணர்க்கும், கூத்தர்க்கும், உழையோர்க்கும் கூற்று நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இல - முன்னர்க் கூறாது எஞ்சி நின்றார்க்கும் கூற்று ஒழிதல் இல.

“பாங்கர் முதலாயினாரை இச் சூத்திரத்தாற் கூறுப் தலைமகள் கூற்றுத் தனித்துக்கூறல் வேண்டும். இவரோடு ஒரு நிகரன்மையின்“ எனின் ஒக்கும். தலைமகள் கூற்று

## அகத்திணையியல்

நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்

### உரை

இதுவும் பாலைக்கு நினைத்தற்கு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும் - முன்பு நிகழ்ந்தது பின்பு விசாரித்தற்கு ஏதுவும் ஆகும். உம்மை எதிர்மறை.

உதாரணம்

"வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை
தந்துபிணி யானை அயாவுயிர்த் தன்ன
என்றூழ் நீடிய வேய்பயில் அழுவத்துக்
குன்றூர் மதியம் நோக்கி நின்றுநினைந்து
உள்ளினேன் அல்லனோ யான்முள் எயிற்றுத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்

VoLTE 9:57 PM 17%



## அகத்திணையியல்

நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே

### உரை

இதுவும் அது.

(இ-ள்) நிகழ்ந்தது கூறி நிலையலும் திணை - முன்பு நிகழ்ந்ததனைக் கூறிப் போகா தொழிதலும் பாலைத் திணையாம்.

உதாரணம்

"ஈன்பருந் துயவும் வான்பொரு நெடுஞ்சினைப்
பொரியரை வேம்பின் புள்ளி நீழற்
கட்டளையன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்
வில்ஏர் உழவர் வெம்முனைச் சீறூர்ச்
சுரன்முதல் வந்த உரன்மாய் மாலை
உள்ளினென் அல்லனோ யானே உள்ளிய
வினைமுடித் தன்ன இனியோள்

## அகத்திணையியல்

“மரபு நிலை திரியா மாட்சிய ஆகி
விரவும் பொருளும் விரவும்“ என்ப.

உரை

இதுவும் அது.

(இ-ள்) மரபு நிலை திரியா மாட்சிய ஆகி விரவும் பொருளும் விரவும் என்ப - மரபுநிலை திரியாத மாட்சிமையுடையவாகி விரவும் பொருளும் விரவும் என்ப.

அ..்.தாவது பாலைக்கு ஓதிய பாசறைப் புலம்பற்கண்ணும், தேர்ப்பாகற்குக் கூறுதற்கண்ணும் முல்லைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் விரவுதலாம். இந்நிகரான பிறவுங் கொள்க.

மரபுநிலை திரியாமையாவது, பாசறைக்கண் வினை முடித்த வழிக் கார்காலம்

## அகத்திணையியல்

உள்ளுறை உவமம், ஏனை உவமம், எனத்
தள்ளாது ஆகும், திணை உணர் வகையே

உரை

இஃது, உள்ளுறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று,

(இ-ள்) உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை
- உள்ளுறையாவது கருப்பொருட்டெய்வம் ஒழிந்த பொருளை, நிலம் என
கொள்ளும் என்ப குறி அறிந்தோர்
- இடமாகக் கொண்டுவரும் என்று சொல்லுவர் இலக்கணம் அறிந்தோர்.

குறி - இலக்கணம்

## அகத்திணையியல்

“உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம் எனக்
கொள்ளும்“ என்ப-குறி அறிந்தோரே

### உரை

இ·.து, உள்ளுறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று,

(இ-ள்) உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை - உள்ளுறையாவது கருப்பொருட்டெய்வம் ஒழிந்த பொருளை, நிலம் என கொள்ளும் என்ப குறி அறிந்தோர் - இடமாகக் கொண்டுவரும் என்று சொல்லுவர் இலக்கணம் அறிந்தோர்.

குறி - இலக்கணம்

0996

பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

“உள்ளுறுத்து இதனொடு ஒத்துப் பொருள் முடிக“ என
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்

உரை

இ·.து, உள்ளுறை உவமம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உள்ளுறுத்து பொருள் இதனோடு ஒத்து முடிக என - (உள்ளுறுத்தப்பட்ட கருப்பொருளை) உள்ளுறுத்துக் கருதிய பொருள் இதனோடு ஒத்து முடிக என , உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம் - உள்ளுறுத்துக் கூறுவதே உள்ளுறை உவமம்.

எனவே, உவமையாற் கொள்ளும் வினை பயன் மெய் உருவன்றிப் பொருளுவமையாற் கொள்ளப்படுவது.

## அகத்திணையியல்

ஏனை உவமம் தான் உணர் வகைத்தே

உரை

இஃது, ஏனை உவமம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஏனை உவமம் தான் உணர் வகைத்து - உள்ளுறை யொழிந்த உவமம் தான் உணரும் வகையான் வரும்.

தான் உணரும் வகையாவது, வண்ணத்தானாதல் வடிவானாதல் பயன-ானாதல் தொழிலானாதல் உவமிக்கப்படும் பொருளொடு எடுத்துக் கூறுதல். ஐஏகாரம் ஈற்றசைஸ

அது வருமாறு உவமவியலுட் கூறப்படும்.

இதனால் திணை உணருமாறு

## அகத்திணையியல்

காமம் சாலா இளமையோள்வயின்,
ஏமம் சாலா இடும்பை எய்தி,
நன்மையும் தீமையும் என்று இரு திறத்தான்,
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்து,
சொல் எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்-
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே

### உரை

மேல் நடுவணைந்திணைக்குரிய பொருண்மையெல்லாம் கூறினார். இது கைக்கிளையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) காமம் சாலா இளமையோள்வயின் - காமம் அமையாத இளையாள்மாட்டு, ஏமம் சாலா இடும்பை எய்தி - ஏமம் அமையாத இடும்பை எய்தி, நன்மையும் தீமையும் என்று இரு திறத்தான் - புகழ்தலும் பழித்தலுமாகிய இரு திறத்தால்,

0999

பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

ஏறிய மடல் திறம், இளமை தீர் திறம்,
தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறம்,
மிக்க காமத்து மிடலொடு தொகைஇ,
செப்பிய நான்கும்-பெருந்திணைக் குறிப்பே

உரை

இது பெருந்திணை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஏறிய மடல் திறம் - ஏறிய மடற்றிறமும், இளமை தீர்திறம் - இளமை தீர்திறமும், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் - தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமும், மிக்க காமத்து மிடலொடு தொகைஇ - மிக்க காமத்து மாறாய திறனொடு கூட்டி, செப்பிய நான்கும் பெருந்திணைக்க குறிப்பு - சொல்லப்பட்ட நான்கு திறமும் பெருந்திணைக் கருத்து.

## அகத்திணையியல்

“முன்னைய நான்கும் முன்னதற்கு“ என்ப.

### உரை

இது கைக்கிளைக்குரியதொரு மரபு உணர்த்துதல் நுதலிற்று .

(இ-ள்) முன்னைய நான்கும் - மேற்சொல்லப்பட்ட நான்கினும் முந்துற்ற நிலைமை நான்கும் , முன்னதற்கு என்ப முற் கூறப்பட்ட கைக்கிளைக்காம் என்ப.

அவையாவன:- ஏறா மடற்றிறம் , இளமை தீராத்திறம் , தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம் , மிக்க காமத்தின் மாறாகாத்திறம் என்பன .

ஏறாமடற்றிறம் வெளிப்பட இரத்தலாம் , இளமை தீராத்திறம் , நலம் பாராட்டலாம் . தேறுதலொழிந்த காமத்து

## அகத்திணையியல்

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியது ஆகும்" என்மனார் புலவர்

### உரை

இதுவும் அகத்திணைக்கு இன்றியமையாத செய்யுளை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நாடக வழக்காவது , சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல் . அஃதாவது செல்வத்தானும் , குலத்தானும் ஒழுக்கத்தானும் , அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும் , அவ்வழிக் கொடுப்போரு மின்றி அடுப்போரு மின்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும் , பின்னும் அவர்

1002 பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்

உரை

இது,
நடுவணைந்திணைக்குரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அகன் மக்கள் நுதலிய ஐந்திணையும் - அகத் திணையுள் கைக்கிளை பெருந்திணை ஒழிந்த ஐந்திற்கும் உரியவாகிய நிலமும் காலமும் கருப்பொருளுமன்றி மக்களைப்பற்றி வரும் புணர்தலும் பிரிதலும் இருத்தலும் இரங்கலும் ஊடலும் என்று சொல்லப்பட்ட ஐந்து பொருண்மையும், சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார் (அவ்வைந்திணைக் கண்ணும் தலை மகனாகப் புலனெறி வழக்கம் செய்ய வேண்டின்) நாடன் ஊரன் சேர்ப்பன் என்னும்

1003 பொருளதிகாரம் அகத்திணையியல்

## அகத்திணையியல்

புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே

உரை

இ∴து, எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது - ஒருவர் பெயர் புறத்திணை மருங்கிற் பொருந்தினல்லது, அகத்திணை மருங்கின் அளவுதல் இல - அகத்திணை மருங்கின் வருதல் இல்லை. ஐஏகாரம் ஈற்றசைஸ.

இதனாற் சொல்லியது ஒருவர்க்குரித்தாகி வரும்பெயர் அகத்திணை பற்றி வரும் கைக்கிளை பெருந்திணையினும் வரப் பெறாது என்பதூஉம், புறத்திணையுள் வரும் என்பதூஉம். ஆண்டும் பாடாண் பாட்டுக் காமம் பொருளாக வரின்